செ.வெ.எண் : 43/ஜனவரி நாள் : 25.01.2019

## இராமநாதபுரம் மாவட்டம்

## தேசிய வாக்காளர் தினத்தை முன்னிட்டு பல்வேறு வாக்காளர் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள்

## மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.கொ.வீர ராகவ ராவ்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது

இராமநாதபுரம் மாவட்டம், இராமநாதபுரம் நகரத்தில் இன்று (25.01.2019) தேசிய வாக்காளர் தினத்தினை முன்னிட்டு மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.கொ.வீர ராகவ ராவ்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் பல்வேறு வாக்காளர் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டது.

1950-ஆம் ஆண்டு ஜனவரி 25-ஆம் நாள் இந்திய தேர்தல் ஆணையம் துவங்கப்பட்ட நாளாகும். பொதுமக்களிடத்தில் வாக்களிப்பதன் அவசியம் குறித்து வலியுறுத்தும் வகையில் இத்தினத்தினை தேசிய வாக்காளர் தினமாக ஆண்டு தோறும் கொண்டாடப்பட்டு வருகிறது. அதனடிப்படையில் இன்றைய தினம் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தலைமையில் இராமநாதபுரம் அரண்மனை வளாகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் தேசிய வாக்காளர் தினம் குறித்த விழிப்புணர்வு வாசகம் அடங்கிய இராட்சச பலூன் பறக்கவிடப்பட்டது. தொடர்ந்து மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் வாக்காளர் தினம் குறித்த விழிப்புணர்வு கையெழுத்து இயக்கத்தினை துவக்கி வைத்தார்.

அதனைத் தொடர்ந்து, கல்லூரி மாணவிகள் பங்கேற்ற வாக்காளர் விழிப்புணர்வு பேரணியினை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் கொடியசைத்து துவக்கி வைத்து பங்கேற்றார். இப்பேரணியில் இராமநாதபுரம் அரசு மகளிர் கலைக் கல்லூரி, சையது அம்மாள் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, பொறியியல் கல்லூரி ஆகிய கல்லூரிகளைச் சார்ந்த 500 மாணவ, மாணவிகள் கலந்து கொண்டு வாக்காளர் விழிப்புணர்வு பதாகைகளை கையில் ஏந்திய படி பேரணியாகச் சென்று பொதுமக்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்தினர். இப்பேரணியானது அரண்மனை வளாகத்தில் இருந்து துவங்கி வண்டிக்காரத் தெரு வழியாக இராமநாதபுரம் வட்டாட்சியர் அலுவலக வளாகத்தில் நிறைவு பெற்றது.

அதன்பின்பு இராமநாதபுரம் அண்ணா பல்கலைக்கழக அரசினர் பொறியியல் கல்லூரியில் நடைபெற்ற தேசிய வாக்காளர் தின விழாவில் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தலைமையில் பல்வேறு வாக்காளர் தின விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றது. குறிப்பாக, வாக்குரிமை அவசியம் குறித்து அமைக்கப்பட்டிருந்த விழிப்புணர்வு கோலம் அருகே மாணவ, மாணவியர்கள் அனைவரும் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தலைமையில் உறுதிமொழி எடுத்துக் கொண்டனர்.

தொடர்ந்து நடைபெற்ற விழாவில் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் பேசியதாவது:

இந்திய தேசமானது உலக அளவில் ஒப்பிடுகையில், மக்களை ஆளுகின்ற தலைவர்களை மக்களே ஜனநாயக முறையில் தேர்ந்தெடுக்கும் வகையில் மக்களாட்சி முறையைக் கொண்ட மாபெரும் தேசமாகும். இத்தகைய மக்களாட்சி முறையில் வலிமையான ஜனநாயகத்திற்கு ஒவ்வொரு வாக்காளரும் தங்களது பொறுப்பை உணர்ந்து தேர்தல் தொடர்பான அனைத்து பணிகளிலும் தன்னை ஈடுபடுத்திக் கொள்வது அவசியமாகும். குறிப்பாக 18 வயது பூர்த்தியானவர்கள் அனைவரும் வாக்காளர் பெயர் பட்டியலில் தங்களது பெயர்களை தவறாமல் பதிவு செய்திட வேண்டும்.

இராமநாதபுரம் மாவட்டத்தில் 01.09.2018 அன்று வெளியிடப்பட்டுள்ள வரைவு வாக்காளர் பட்டியலின்படி 11,14,048 வாக்காளர்கள் உள்ளனர். 01.01.2019-ம் நாளை தகுதி நாளாகக் கொண்டு 18 வயது பூர்த்தியாகும் அனைவரையும் புதிய வாக்காளர்களாக வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்த்திடும் வகையில் “No Voters to be left behind-எந்த ஒரு வாக்காளரும் விடுபட்டுவிடக் கூடாது” என்பதை அடிப்படையாகக் கொண்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது என பேசினார்.

தொடர்ந்து, தேசிய வாக்காளர் தினத்தை முன்னிட்டு பள்ளி மற்றும் கல்லூரி மாணவ, மாணவியர்களுக்கு நடத்தப்பட்ட பேச்சுப் போட்டி, கட்டுரைப் போட்டி, ஓவியப் போட்டி ஆகியவற்றிலும் வாக்காளர் விழிப்புணர்வு (SVEEP) தொடர்பாக நடத்தப்பட்ட பல்வேறு போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் பரிசு மற்றும் சான்றிதழ்களை வழங்கினார்.

அதனைத் தொடர்ந்து, மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில், 1950 என்ற கட்டணமில்லா தொடர்பு எண்ணுடன் செயல்படும் மாவட்ட அளவிலான தேர்தல் தொடர்பு மையத்தினை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் துவக்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சிகளில் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு.ஓம் பிரகாஷ் மீனா,இ.கா.ப., மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி.சி.முத்துமாரி, இராமநாதபுரம் வருவாய் கோட்டாட்சியர் டாக்டர் ஆர்.சுமன், செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் திரு.கோ.அண்ணாதுரை, அண்ணா பல்கலைக்கழக அரசு பொறியியல் கல்லூரி முதல்வர் முனைவர் டி.சேகர், தேர்தல் வட்டாட்சியர் திரு.முருகேசன், இராமநாதபுரம் வருவாய் வட்டாட்சியர் திரு.கார்த்திகேயன் உள்பட அரசு அலுவலர்கள், மாணவ, மாணவியர்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்**